துணை ஆணையர் (மா.வ)(முகூபொ), சரகம் -3, சென்னை -3 அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை - திரு. வீ. கதிரவன்,

இடம்: 5வது தளம், ஒருங்கிணைந்த வணிகவரி வளாகம், [illegible]
சென்னை-3.

ந.க. 864 /2019/அ 1 நாள் 20.07.2020

பொருள் : பொதுப்பணிகள் - வணிக வரித்துறை - சென்னை (வடக்கு) கோட்டம் - துணை ஆணையர் (மா.வ), சரகம் - 3, சென்னை - 3 - தட்டச்சர் பணி - அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV 2017-2018 ன் மூலம் நியமனம் செய்யப்பட்டு பணியில் சேர்ந்த தட்டச்சர்கள் பணியிடத்தில் பணி வரன்முறை செய்தல் - ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை :
1. அரசு ஆணை எண்.130, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, நாள் 22.07.2008.
2. அரசு ஆணை எண்.43, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 17.04.2009.
3. செயலாளர் / தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடித எண்.1699 – PSD-A /2019, நாள்.18.02.2019.
4. இணை ஆணையர் (வவ), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை - 6 அவர்களின் செயல்முறை ந.க.1612/2017/அ2-I நாள். 25.02.2019
5. இணை ஆணையர் (வவ), சென்னை (வடக்கு) கோட்டம், சென்னை-6 அவர்களின் செயல்முறை ந.க.980/2019/அ1, நாள். 05.03.2019.

---

**ஆணை:**

பார்வை 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2017-2018 -ம் ஆண்டு தொகுதி IV தேர்வின் மூலம் தேர்வு செய்யப்பட்டு பார்வை 5ல் குறிப்பிடப்பட்டுள்ள இணை ஆணையர் (மா.வ), சென்னை (வடக்கு) கோட்டம் அவர்களின் செயல்முறை ஆணையின்படி துணை ஆணையர் (மா.வ), சரகம்-3 அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்கண்ட தட்டச்சர்கள் பணி நியமனம் செய்யப்பட்டார்கள். தனியாளர்களின் பணியினை வணிகவரித்துறையில் தனியாளர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து தட்டச்சர் பணித்தரத்தில் பணிவரன்முறை செய்து அன்றைய தினம் முதல் தனியாளர்களுக்கு தகுதிகாண் பருவம் தொடங்கியதாகவும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பெயர் / பதவி திருவாளர்கள் | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1. | க. ஸ்ரீராம் தட்டச்சர் | துணை ஆணையர்(மா.வ) சரகம்-3 | 11.03.2019 மு.ப | 11.03.2019 மு.ப |
| 2. | ர. பிரியா தட்டச்சர் | உதவி ஆணையர்(மா.வ) பொன்னேரி வரிவிதிப்பு வட்டம். | 11.03.2019 மு.ப | 11.03.2019 மு.ப |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | கு. லட்சுமி<br>தட்டச்சர் | உதவி ஆணையர்(மா.வ)<br>சோழவரம் வரிவிதிப்பு<br>வட்டம். | 11.03.2019 மு.ப | 11.03.2019 மு.ப |
| 4. | பு. புவனேஸ்வரி<br>தட்டச்சர் | உதவி ஆணையர்(மா.வ)<br>சூரப்பட்டு வரிவிதிப்பு வட்டம் | 11.03.2019 மு.ப | 11.03.2019 மு.ப |

2. தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதிகளில் விதி 34(a) மற்றும் அதனுடன் கூடிய பிற்சேர்க்கை ஐந்தில் குறிப்பிட்டுள்ளபடி, மேற்படி தனியாளர்கள் தட்டச்சராகப் பணியேற்ற நாள்முதல் மூன்றாண்டு காலத் தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலத்திற்குள் தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

3. மேலும் தகுதிகாண் பருவ காலத்திற்குள் மேற்படி தனியாளர்கள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறைகள் (Tamil Nadu Government Office Manual) மற்றும் பார்வை 1 மற்றும் 2-ல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி, தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் நடத்தப்பெறும் தொழில் நுட்பத் தேர்வான கணினிவழி அலுவலக தன்னியக்க முறை (Computer on Office Automation) ஆகிய தேர்வுகளில் தேர்ச்சிப் பெறுதல் வேண்டும். மேலும் தகுதி பாண் பருவ காலத்தில் பணி மனா நிறைவு தரும் வகையில் அமைதல் மிகவும் அவசியம் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

4. இப்பணிவரன்முறை ஆணை சென்னை உயர்நீதிமன்ற சென்னை மற்றும் மதுரை கிளைகளில் பணிநியமன ஆணைகளுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகளுக்கு உட்பட்டது.

5. மேற்கண்ட தனியாளர்கள், பணிவரன்முறை ஆணையினைத் தொடர்ந்து, இரண்டாவது மற்றும் அதற்குபிறகுமுள்ள வருடாந்திர ஊதிய உயர்வினை, தகுதிகாண் பருவம் முடித்தபிறகு பெற தகுதியுடையவர்களாவர்.

ஒம்/- வி. கதிரவன்,
துணை ஆணையர் (மா.வ)(முகூ.பொ)
சரகம் - 3, சென்னை-3.

பெறுநர்
தனியாளர்கள்

நகல் - தகவலுக்காக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை - 6.
2. இணை ஆணையர் (மா.வ), சென்னை (வடக்கு) கோட்டம், சென்னை - 3.
3. இணை ஆணையர் (மா.வ), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை - 6.

// உண்மை நகல் / உத்தரவின்படி//

மேலாளர்